# <u>பதிவுத்துறை</u>

**அனுப்புநர்:**

திரு.ந.சேகர்,எம்.எஸ்சி.,எம்.பி.ஏ.,
துணைப்பதிவுத்துறைத்தலைவர்,
துணைப்பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை-35.

**பெறுநர்:**

சென்னை பதிவு மண்டல அனைத்து சார்பதிவாளர்கள் மற்றும் மாவட்டப்பதிவாளர்கள் (நிர்) மற்றும் (தணிக்கை)

அய்யா/அம்மையீர்,

**எண்.4798/ஆ1/2021 நாள்.17.11.2021**

பொருள் : பொது அதிகார ரத்து ஆவணங்கள் குறித்து முதல்வர் - முகவருக்கு அறிவிப்பு கடிதம் அனுப்ப சார்பதிவாளர்கள் அறிவுறுத்துவது தொடர்பாக

பார்வை : எழல்

*****

பொது அதிகார ஆவணம் குறித்த ரத்து ஆவணம் பதிவிற்கு தாக்கல் செய்யப்படும் நிகழ்வுகளில், பொது அதிகார ஆவணம் ரத்து செய்யப்படும் விவரத்தினை முதல்வர் முகவருக்கு கடிதம் மூலம் தெரிவிக்க வேண்டுமெனவும் அவ்வாறு தெரிவித்ததற்கான ஆதாரம் சார்பதிவாளர்களால் கோரப்படுவதாகவும், அவ்வாறான ஆதாரம் தாக்கல் செய்யப்படாத பட்சத்தில் பொது அதிகார ரத்து ஆவணங்களை சார்பதிவாளர்கள் வாய்மொழியாக அல்லது Check-slip மூலமாக பதிவிற்கு ஏற்க மறுப்பதாகவும், புகார்கள் பெறப்படுகின்றன.

**பதிவுத்துறைத் தலைவர் அவர்களின் சுற்றறிக்கை எண்.42938/இ1/2009 <u>நாள்.18.12.2009-ல் இப்பொருள் குறித்து பின்வருமாறு தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது.</u>**

| | | |
|---|---|---|
| வினா எண்.11 | பொது அதிகாரம் ஆவணத்தை ரத்து செய்ய முகவரின் ஒப்புதல் வேண்டுமா? | முகவரின் ஒப்புதல் தேவையில்லை. இந்நிகழ்வில் அசல் பொது அதிகார ஆவணத்தை தாக்கல் செய்ய வலியுறுத்த தேவையில்லை.<br><br>பொது அதிகார ஆவணம் ரத்து செய்யப்பட்டதாக தந்தி (அ) கடிதம் வாயிலாக தெரிவிக்கும் நிகழ்வுகளில் பொது |

| | | |
|---|---|---|
| | | அதிகாரம் வழங்கும் ஆவணத்தை ரத்து செய்ய ரத்து ஆவணம் பதிவு செய்து கொள்ள முதல்வருக்கு சார்பதிவாளர் அறிவுறுத்த வேண்டும். வெளிநாட்டில் கையொப்பம் செய்யப்பட்ட ஆவணமாக இருந்தால், இந்திய பதிவுச்சட்டப்பிரிவு 31, 32, 33-ல் தெரிவித்தவாறு ரத்து ஆவணம் இந்திய தூதரக அதிகாரி (அ) பொது அத்தாட்சியாளர் (Notary Public)முன்பாக எழுதிக்கொடுக்கப்பட்டு பதிவுச்சட்டப்பிரிவு 31,32, 33-ன் கீழ் அத்தாட்சி செய்யப்பட்டால் மட்டுமே அதனை அங்கீகரிக்க வேண்டும். |

இதன்படி ஓர் பொது அதிகார ஆவணத்தை, ரத்து செய்வதாக இருந்தால் ரத்து ஆவணம் மூலமாகவே ‘முதல்வர்’ ரத்து செய்ய அறிவுறுத்தப்பட வேண்டுமெனவும், மாறாக முகவருக்கு தந்தி (அ) கடிதம் வாயிலாக பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்வதாக தெரிவிப்பதை சார்பதிவாளர்கள் ஊக்குவிக்க கூடாது என்ற விபரமே தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

<u>மேலும் பதிவுத்துறைத் தலைவர் ந.க.எண்.42938/இ1/2009 நாள்.15.06.2010-ல் பத்தி 1ல் இதே பொருள் குறித்து பின்வருமாறு தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது.</u>

**“ 1. பார்வை 5ல் கண்ட சுற்றறிக்கையில் (பதுத எண்.42938/இ1/2009 நாள்.17.05.2010) பொதுஅதிகார ஆவணம் எழுதிப்பெறும் முகவரும் ஆவணத்தில் கையொப்பமிடவேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் பொது அதிகார ஆவணங்களை ரத்து செய்யும் போதும் முகவரும் நேரில் தோன்றி ஒப்பமிட வேண்டும் என தெரிவிக்கப்படவில்லை. பொதுஅதிகார ஆவணத்தை ரத்து செய்ய முதல்வர் முகவருக்கு சட்டப்படி அறிவிப்பு அனுப்பினால் மட்டுமே போதுமானதாகும். இந்நியையில் முதல்வர் பொதுஅதிகார ரத்து ஆவணம் பதிவு செய்யும் நிகழ்வுகளில் முகவரும் அலுவலகத்திற்கு வந்து கையொப்பமிட வேண்டும் என சில பதிவு அலுவலர்களால் வலியுறுத்தப்படுவதாக பதிவுத்துறைத் தலைவரின் கவனத்திற்கு வரப்பெற்றுள்ளது. இது தவறான நடைமுறை ஆகும். எனவே பொது அதிகார ஆவண ரத்து**

**குறித்து, முகவர் அலுவலகம் வந்து சம்மதம் தெரிவிக்கவோ ஆவணத்தில் கையொப்பம் செய்யவோ அவசியம் இல்லை என தெரிவிக்கப்படுகிறது "**

இச்சுற்றறிக்கையானது பொது அதிகார ஆவணங்கள் 4 புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டு வந்த காலத்தில் பிறப்பிக்கப்பட்டதாகும். பொது அதிகார ஆவணமோ, ரத்து ஆவணமோ பதிவு செய்வது அக்காலக்கட்டத்தில் கட்டாயமாக்கப்படவில்லை. அவ்வாவண பதிவு விவரங்களும் வில்லங்கச்சான்றில் பிரதிபலிக்கப்படமாட்டாது. இதன் பொருட்டே இத்தெளிவுரையில் "**பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்ய முதல்வர், முகவருக்கு சட்டப்படி அறிவிப்பு அனுப்பினால் மட்டுமே போதுமானதாகும்**" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி அக்காலக்கட்டத்தில் இரத்து ஆவணம் மூலம் மட்டுமே பொது அதிகார ஆவணம் ரத்து செய்யப்பட வேண்டும் என்ற சட்ட நிலையில்லை என்ற விபரம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. மாறாக ரத்து குறித்து முதல்வர், முகவருக்கு அறிவிப்பு கடிதம் அனுப்ப வேண்டும் என்ற பொருள்பட ஏதும் அறிவுறுத்தப்படவில்லை என்ற விவரத்தை சார்பதிவாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மேலும், முதல்வர் முகவருக்கு அறிவிப்பு ஏதும் செய்த விவரத்தை ரத்து ஆவணத்தில் குறிப்பிடப்பட வேண்டும் என்றோ, அக்கடித நகலை பெற்று அலுவலகத்தில் கோர்வை செய்யவோ, ஒளிவருடல் செய்யவோ வலியுறுத்தப்படவில்லை என்பதிலிருந்தே, பொது அதிகார ஆவணம் ரத்து செய்யப்படுவதை முதல்வர், முகவருக்கு அறிவிப்பு செய்த பின்னரே, இரத்து ஆவணம் பதிவிற்கு ஏற்கப்பட வேண்டும் என்ற சட்ட நிலையேதுமில்லை என்ற விவரம் தெளிவாகிறது என்பதால் இனிவரும் காலங்களில் இதுக்குறித்த புகாருக்கிடமின்றி செயல்பட அனைத்து சார்பதிவாளர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

17/11/21.

**துணைப்பதிவுத்துறைத் தலைவர்,**
**சென்னை மண்டலம்.**

**நகல்:**

பதிவுத்துறைத்தலைவர் அவர்கள்,
சென்னை – 28
(தகவலின் பொருட்டு பணிந்து சமர்பிக்கப்படுகிறது)